சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

01 மார்கழி 2052
16th December 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

**பன்னாட்டு கருத்தரங்கம் -2021**
சிறப்பிதழ் : **தமிழ்த்துறை**
**நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,**
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியங்களில் சொல்வளமும் பொருள்வளமும்

சிறப்பிதழ் ஆசிரியர்

**Special Issues Editor**
முனைவர் **பா. அருள்ஜோதி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

35

சிறப்பிதழ் 01 மார்கழி 2052 ISSN : 2321 - 984X

Special Issue 16th December 2021


| | | | |
|---|---|---|---|
| 1. | த. தினேஷ் | சங்க இலக்கியத்தில் நிலக்கிழாரியம் | 1-6 |
| 2. | ப.இராமகிருஷ்ணன் | தொல்காப்பியர் காட்டியுள்ள காட்டலாகாப் பொருள்கள் தொல்காப்பியம் கூறும் பொருள்கள் | 7-9 |
| 3. | மு. சித்ரா தேவி | தொல் தமிழரின் உணவு வகைகளும் சொல்லாடல் திறனும் | 10-16 |
| 4. | சி.ரா.சுரேஷ் | சின்னப்பபாரதி படைப்புகளில் மனித நேயம் | 17-23 |
| 5. | செ. நாகேஸ்வரி | கண்மணி குணசேகரன் சிறுகதையின் சொல்வளத்தில் வறுமையின் அவலங்கள் | 24-31 |
| 6. | சு.அப்பாசாமி & ரு. அசோகன் | தொல்காப்பியம் கூறும் காஞ்சித் திணை புறப்பொருள் வெண்பாமாலை கூறும் காஞ்சித் திணை ஒப்பீடு | 32-38 |
| 7. | இரா.பிரீத்தி | தமிழ் இலக்கியங்களும் முருகக்கடவுளும் | 39-41 |
| 8. | சா.சிவா & சொ.மகாதேவன் | இறைவழிபாட்டில் அறிவியல் சார்ந்த சொல்லாட்சி | 42-45 |
| 9. | க. தேவி & சீ மேபெல் ஜோதி ராணி | நான் என்னும் புதினத்தில் பேயோட்டல் நிகழ்வு | 46-54 |
| 10. | ந.மகாதேவி | கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் நீர்மேலாண்மையும் வேளாண்மையும் | 55-62 |
| 11. | கு.பரமேசுவரன் | அம்சப்ரியா கவிதைகளில் மனிதநேய தேடல் | 63-69 |
| 12. | வ. பூங்கொடி | திருமந்திரத்தில் காலமும் நிகழ்வும் (பக்திஇலக்கியம்) | 70-75 |
| 13. | கா.உமாராஜ் | தொல்காப்பியத்தில் இடைச்சொற்கள் | 76-81 |
| 14. | மு.கீதா | மெய்பெறு மரபிற் தொடை வகைத் தாமே - நூற்பாவின் மூலப்பொருண்மை மீட்டுருவாக்கம் | 82-88 |
| 15. | ஐ.க.விஜி | சங்க இலக்கியத்தில் கொடையும் அறமும் | 89-92 |
| 16. | அ. கோகுல்கண்ணன் | திருக்குறள் - நீதிநூல் ஒப்பீட்டாய்வு | 93-98 |
| 17. | த.ரா. உதயகுமாரி | சங்க காலமும் மனிதநேயமும் | 99-102 |
| 18. | மு.வடிவேல் & ஜெ.அமிதா டார்வின் | பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடக மேடையும் வடிவமைப்பும் | 103-109 |
| 19. | பி.வீ.ஸ்ரீதேவி | ஜெயமோகன் புதினங்களில் நாஞ்சில் வட்டார வழக்குச் சொற்கள் | 110-114 |
| 20. | இர. கண்ணதாசன் | செய்யுள் புற வடிவ உறுப்புகளும் சங்க இலக்கியப் பாடுபொருளும் - ஓர் அறிமுகம் | 115-121 |
| 21. | மு.லோகநாயகி | கவிஞர் குலோத்துங்கனின் மானுட யாத்திரையில் சொல்லாக்கம் | 122-126 |
| 22. | செ.ரெ. ஜெஸ்லின் சஜி | புறப்பொருள் வெண்பாமாலையில் சொல்வளம் | 127-130 |
| 23. | ச. குமார் | சைவக் குரவர்கள் பார்வையில் இறையடி | 131-135 |
| 24. | செ.கற்பகம் | சிலப்பதிகார அரங்கேற்று காதை காட்டும் நாட்டிய சொல் வளம் | 136-140 |
| 25. | மி. ஜென்ஸிஸ் குமார் | தமிழ்ச் சொற்கள் வழக்கிழப்பின் பின்னணியில் புதிய வரலாறெழுதியல் | 141-145 |
| 26. | தி.திவ்யா | தேவார மூவர் வரலாற்றில் திருவாமாத்தூர் | 146-149 |
| 27. | ஞா. ஷைனி | மலர்வதியின் சிறுகதைகளில் குடும்பச் சிக்கல்கள் | 150-154 |
| 28. | ஆ.மணிகண்டன் | சபரிமலை யாத்திரையில் ஐயப்ப வழிபாடும் சடங்கு முறைகளும் | 155-160 |
| 29. | மு.துர்கா | திவ்வியப் பிரபந்தத்தில் கட்டு அடைத்தொடரும் யாப்பு கட்டமைப்பும் | 161-170 |
| 30. | ஜா.பீற்றர் ராஜ் & தா.திருநாவுக்கரசு | வேளாண்மைச் சடங்குகளில் மந்திரம் | 171-174 |
| 31. | அ.சவரிராயம்மாள் | எட்டுத்தொகை அகப்பாடல்களில் தெய்வமகளிரும் பிறமகளிரும் | 175-180 |
| 32. | பா.புவனேஸ்வரி | தமிழ் இலக்கியங்களில் சொல்வளம்- தாவரம் என்னும் பொருண்மையில் | 181-187 |
| 33. | பூ.பூங்குழலி | சங்க இலக்கியத்தில் தலைவியின் ஆளுமைத்திறம் | 188-192 |
| 34. | ந.கல்பனா & இரா.சிவசங்கரி | சங்கப் பனுவல்களில் சூழலியல்சார் புழங்குப்பொருட்கள் | 193-200 |
| 35. | பெ. ஜெகதாம்பாள் | புறநானூற்றில் மூதின்மகளிர் பாடல்களின் நோக்கும் போக்கும் | 201-206 |
| 36. | ஆர். முத்துராஜன் | காமஞ்சேர் குளத்தாரும் சொல் வளமும் | 207-214 |
| 37. | செ.லீ. ஹெலன் ஜெபா றோஸ் | தமிழ்க் காப்பு இயத்தில் சொல் வளம் | 215-218 |
| 38. | இராணி. இரா | தற்கால வழக்கில் அருகிப்போன ஐங்குறுநூற்றுச் சொற்கள் | 219-223 |
| 39. | பா.றோ.சுபத்ரா | நேசத்துணை நாவலில் மொழிநடைக் கூறுகள் | 224-228 |
| 40. | ம.மீனாட்சி | இராஜம் கிருஷ்ணனின் பரிசு பெற்ற புதினங்களில் சொல் ஆளுமை | 229-237 |
| 41. | மா.ஜெ.சசிக்குமார் & பே.மஹேஸ்வரி | தமிழ் இலக்கியங்களில் சிலம்பம் - சொல்லாய்வு | 238-242 |
| 42. | ஆ.அனிதா & சோ. பத்மாவதி | சிறைக்குடி ஆந்தையார் பாடலில் புனைகதை எடுத்துரைப்பியல் | 243-247 |
| 43. | பா.அருள்ஜோதி | புறப்பொருள் வெண்பாமாலைகாட்டும் மறவர் - சொல்லாய்வு | 248-252 |
| 44. | ஆ.ராஜேஸ்வரன் | சங்க இலக்கியத்தில் சூழல் | 253-258 |
| 45. | ரா.மேரிஜான்சி & Y. ராணி | குமரி மாவட்ட நாவல்களில் காணலாகும் சொல்வளம் | 259-263 |
| 46. | ஜெ. குணசேகரன் | திருக்குறளில் அடைமொழி | 264-268 |
| 47. | த.பரமேஸ்வரன் | புலவராற்றுப்படையில் இலக்கண நய உரை | 269-274 |
| 48. | ரா நாகேந்திரன் | இளங்கோவின் சொல்வளம் | 275-280 |
| 49. | த.நாகம்மாள் | நீதி நூல்கள் கூறும் கல்வி அறம் | 281-286 |
| 50. | மா.தேவிபாலா & ஆ.அருள்தாசு | சங்க இலக்கியத்தில் முன்னோர் வழிபாடு | 287-292 |
| 51. | ம.இராஜகோபால் & த.பரமேசுவரி | தமிழ்மகன் புதினங்களில் குடும்ப உறவுகள் | 293-298 |
| 52. | து.விசாலாட்சி & த.பரமேஸ்வரி | வா.மு.கோமுவின் சிறுகதைகளில் - உறவுகளின் நிலை | 299-305 |
| 53. | ப.சசிரேகா | பெண்களின் விளையாட்டில் 'அச்சாங்கல்' | 306-310 |
| 54. | இரா. கவிதா & த.கருப்பையா | 'பள்ளிக்கூடம்' புதினத்தில் கிராமியக் கூறுகள் | 311-316 |
| 55. | ரா. விஜயலட்சுமி | தமிழ் இலக்கியத்தில் விருந்தோம்பல் பண்பு | 317-321 |
| 56. | க.விமலா | யெஸ்.பாலபாரதியின்படைப்புகளில்மதியிறுக்கம் - (AUTISM) சிலபுரிதல்கள் | 322-330 |
| 57. | மா.தினேஷ்வரன் | திருக்குறளில் கருத்துவகை வாக்கியங்களும் இலக்கணப் பொருண்மைச் சொற்களும் | 331-336 |
| 58. | ஏ.மேரிநேசபிரியம் | பதிற்றுப்பத்து-வினையெச்சம் | 337-341 |
| 59. | த.திருமாறன் | கம்பராமாயணத்தில்கவிமா,கடுமா,இவுளி | 342-351 |
| 60. | த.ப.சூரியா | தொல்காப்பிய உரியியல் உணர்த்தும் இசையுரிச்சொற்கள் | 352-358 |
| 61. | ர.பாலதரணி & க.தனலட்சுமி | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பண்பாட்டுக் கட்டமைப்பு | 359-365 |
| 62. | பா.சூர்ய பிரகாஷ் & பா.அருள்ஜோதி | குறுந்தொகையில் தாவர சூழல் சொற்கள் | 366-369 |
| 63. | ம. காயத்ரி | சங்க இலக்கியத்தில் தச்சுத் தொழில்கள் | 370-373 |
| 64. | இரா.முருகன் | தமிழ் இலக்கியத்தின் தொழில்கள் | 374-377 |
| 65. | து.யோககலைவாணி & பா.அருள்ஜோதி | மனிதநேய சொற் பொருள் விளக்கம் | 378-383 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241

Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# தமிழ்மகன் புதினங்களில் குடும்ப உறவுகள்

ம.இராஜகோபால்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

நெறியாளர் முனைவர் த.பரமேசுவரி
தமிழ்த்துறைத்தலைவர்(சுயநிதி)
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மகன் புதினங்களில் குடும்ப உறவுகள் என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையின் முன்னுரையில் குடும்பம் என்ற சொல் பேமிலி [Family] ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டதை அறிய முடிகிறது. குடும்ப அமைப்பு, குடும்ப உறவுகள், குடும்பத்தின் வரையறை, கூட்டுக் குடும்பச் சிக்கல், சொத்துச் சிக்கல், ஆகிய துணைத் தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் நிறைவாக ஆய்வில் கண்ட முடிவை தொகுப்புரையாக வழங்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

மனித வாழ்வில் சிறப்பானதும் முழுமையானதும் குடும்பம் என்ற அமைப்பாகும். ஒருவனின் ஒழுக்கப் பண்புகளின் முழுமை குடும்பம் என்ற அமைப்பில் சீரமைக்கப்படுகிறது. தனிமனித ஒழுக்கம் குடும்பத்தை வழி நடத்தும் என்றாலும் தனி மனித ஒழுக்கம் குடும்பத்தால் செயல் வடிவம் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டிய களமாகக் குடும்பம் திகழ்கிறது. ஒரு பொருளின் தரம் அது சார்ந்த நிறுவனத்தின் கூட்டு உழைப்பு என்பதனைப் பொருள் தீர்மானிப்பது போல, தனிமனித ஒழுக்கம் குடும்பம் என்கிற அமைப்பால் அடையாளப்படுத்தப்படுகிறது.

## குடும்பம்

குடும்பம் என்பதை ஆங்கிலத்தில் "பேமிலி" [Family] என்று கூறுவார்கள். இச்சொல் ரோமானியர்களின் ''பேமுலஸ்'' என்ற சொல்லிலிருந்து உருப்பெற்றது என்பர். பேமுலஸ் என்பதற்கு வீட்டு அடிமை என்பது பொருள். Famila என்றால் ஒருவருக்குச் சொந்தமான அடிமைகளின் மொத்தத் தொகை என்பது பொருள். ஒரு புதிய சமுதாய அமைப்பை வர்ணிப்பதற்காக ரோமியர்கள் இந்தச் சொல்லைத் தோற்றுவித்தனர்.

கூடு, குடும்பை, குடும்பு போன்ற சொற்களை ஆராய்வதன் மூலம் குடும்பம் என்பதற்குத் தமிழர் கொண்ட பொருளை அறிய முடியும். கூடு, குடும்பை, குடும்பு போன்ற சொற்கள் கூடுதல், கூடி இருத்தல் என்று பொருள் பட்டவை ஆகும்.

குடும்பம் என்பது திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலையான நெருக்கமான இணைப்பினால் அவிழ்க்க முடியாதபடி பிணைக்கப்பட்டு ஒன்றாக இருக்கிறது. அஃது அவர்களுடைய உறவுகளை ஒரு குறிப்பிட்ட திட்ட வடிவமான வழியில் ஒழுங்குபடுத்துகின்றது. அந்த பிணைப்பு இருவருக்குமிடையே ஒருவித ஈடுபாட்டையும், கவர்ச்சியையும், பொது நல உணர்ச்சியையும், கணவன், மனைவி என்ற ஆத்மீக இரத்த உறவையுமே முதன்மையாகக் கொள்கிறது.

கூடி வாழ்தல் எனும் பொருள் தரும் கூடி என்ற சொல்லின் பழைய சொல்லாகிய குடும்பை என்ற சொல்லும் குலையாகக் கொத்தாக இருக்கும் இருப்பினைக் குறிக்கின்ற குடும்பு என்ற சொல்லில் குடும்பம் என்ற சொல்லோடு நெருங்கிய தொடர்பு உள்ளதை அறிய முடிகிறது. குடம்பை என்ற சொல்லை விடவும் குடும்பு என்ற சொல் குடும்பம் என்பதோடு மிக நெருக்கம் உடையதை உணர வேண்டும். எனவே குடும்பு என்ற சொல்லோடு அம் விகுதி சேர்ந்த குடும்பம் என்ற சொல்லுக்குக் கணவன், மனைவி, பிள்ளைகள் கொத்தாகக் கூட்டமாகக் குலையாகக் கூடி வாழும் ஓர் அமைப்பு எனப் பொருள் கொள்ள இயலும்.

கணவன் மனைவியாக இணையாத எவராலும் ஒரு குடும்பம் உருவாவதில்லை. எனவே குடும்பத்திற்கு அடிப்படை கணவன், மனைவி உறுப்பினர்கள் ஆவார்கள்.

இந்திய சமூக அமைப்பைப் பொறுத்தவரையில் குடும்பம் என்பது சமூகத்தின் வளர்ப்புப் பண்ணையாக விளங்குகிறது எனலாம். இன்னும் ஆழ்ந்து குறிப்பிடுவதாயின் சமூகத்தின் நாற்றாங்கால் குடும்பமே என்பது இந்திய சமூக வரலாறு சுட்டும் செய்தியாகும். திருமணம் என்ற ஒழுங்கமைதியின் மூலமாகக் குடும்பக் கட்டமைப்பு இந்தியாவில் காலம் காலமாக வலுப்பெற்று வந்திருக்கிறது.

மனிதன் ஓர் உயிரியல் விலங்கு என்றாலும் அவன் ஒரு சமுதாய விலங்குமாவான். மனிதனுக்குக் கீழ் நிலையில் உள்ள பாலூட்டிகளிடமும் மனிதனை ஒத்த சமுதாய வாழ்வு காணப்படுகிறது. எனினும் மனிதர்களே முழுமை பெற்ற சமுதாய வாழ்க்கையைக் கொண்டவர்கள்.

பறவைகளும் விலங்குகளும் பிறரைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தனது பசிக்கேற்ப இரை தேடுவதற்கு ஓடியாடித் திரிகின்றன. உண்டு உறங்கித் தன் இனத்தைப் பெருக்கி வாழ்கின்றன. அவைகளின் வாழ்வில் எத்தகைய மாறுதலையும் நாம் காணமுடியாது. எண்ண முடியாத ஆண்டுகளாக அவைகளின் வாழ்க்கை ஒரே நிலையில் தான் இருக்கிறது.

மக்களுடைய வாழ்வு ஆண்டுக்கு ஆண்டு மாறிக் கொண்டே வருகிறது. ஒரு காலத்தில் விலங்குகளைப் போலவே பிறந்தமேனியாக மக்கள் வாழ்ந்தனர். இயற்கையாக விளைந்த உணவுப் பொருட்களை உண்டு உறங்கினர். நாளடைவில் அவர்கள் பல துறையிலும் வளர்ச்சி அடைந்தனர். இன்று ஆளக் கூடிய நிலையில் இருக்கின்றனர். இவ்வாறு முன்னேறுவதற்குக் காரணம் அவர்களிடமுள்ள கலந்து வாழும் குடும்ப முறையே ஆகும்.

மனித சமுதாயத்தில் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பமே ஆகும்.

**“குடும்பம் ஒரு குழுவானாலும் ஒரு வித்தியாசமான குழு, மற்றைய குழுக்களில் காணப்படாத சில சிறப்பியல்புகள் குடும்பத்திற்கு உண்டு. அவை குடும்பம் ஓர் உலகளாவிய குழு எல்லாச் சமூகங்களிலும் எல்லாக் காலங்களிலும் நிலவி வருகிறது. மானிடச் சமூகத்தின் தொடக்கக் காலத்திலிருந்து நிலவி வருகிறது”**[1] என வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது.

குடும்பம் என்பது திருமணத்தின் அடிப்படையில் தான் அமைகிறது. ஓர் ஆணும் பெண்ணும் வெறுமனே சேர்ந்து வாழ்தலைக் குடும்பம் என்று கூற முடியாது. குடும்பத்தில் கணவன், மனைவி, தாய், தந்தை, சகோதரன், சகோதரி எனும் உறவுடன் வாழ்வதுதான் குடும்பம் ஆகும்.

குடும்பம் என்பது ஆலமரத்தினைப் போலவும், அதில் வாழும் உறவுகள் அந்த மரத்தின் விழுதுகள் போல ஒன்றிணைந்தது ஆகும். மனித சமூகத்தின் தொடக்கக் காலத்தில் திருமணம் என்ற

அமைப்போ குடும்பம் என்ற அமைப்போ காணப்படவில்லை. மனிதன் தன்னுடைய தேவைகளை முழுவதுமாக நிறைவேற்ற முடியாத நிலையில் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் காரணமாகவும் கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள் என்ற இரத்த தொடர்பினாலும் குடும்பம் என்ற ஓர் அமைப்பு உருவானது.

பொதுவாகக் குடும்பம் பற்றிக் குறிப்பிடும்போது பல விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் குடும்பம் ஒரு நிறுவனம் என்றும், சிலர் அஃது ஒரு நிலையம் என்றும், ஒரு சிலர் ஒரு குழு என்றும் வழங்குகின்றனர். அது எவ்வாறு அழைக்கப்படினும் மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட பொருள் உடையவை.

“நிறுவனம் என்பது ஒரு செயலைச் சுற்றி அமைந்திருக்கின்ற நெறிகளின் தொகுதி நிலையமோ, வேறுபட்ட மனிதர்களை உட்கொண்டிருக்கின்ற ஒரு கூட்டுக்குழு. குழு என்பது அம்மனிதர்களிடையே செய்தித் தொடர்பினால் ஏற்படுகின்ற அமைப்பைக் குறிக்கும்”2 என்று பாஸ்கல் கிஸ்பர்ட் கூறுகிறார். இவை மூன்றும் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன என்றாலும் கருத்தளவில் வேறுபட்டனவே.

குடும்பமாக வாழ்வதன் மூலம் முன்னோர்கள் கடைப்பிடித்த பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், தெய்வ வழிபாடுகள் போன்றவை அழியாமல் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன. குடும்பங்கள் பல ஒன்றிணைந்தது சமுதாயம் ஆகும் சமுதாயம் நலம் பெற வேண்டுமானால் குடும்பங்கள் நலம் பெற வேண்டும். குடும்பம் என்பது சமூகத்தின் மிகச்சிறந்த ஒன்றாகும் ஆனால் அதில் பல நெருக்கமான உறவுகள் பின்னிப் பிணைந்துள்ளன. அதில் தான் இனத்திலுள்ள ஒற்றுமை, பாசம் போன்ற உன்னத உணர்வுகளும் தேவைகளும் முழுமையாகத் திருப்தி அடைகின்றன. எனவே மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் குழுவோடு பிணைப்பு வைத்திருக்கிறான். அவனுடைய உடல் உள்ள தேவைகளைப் பெரிதும் நிறைவேற்றி அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பம் என்பதை மேற்கண்டவாறு அறிந்து கொள்ளலாம்.

குடும்பம் என்பது இயக்கமுள்ள சித்தாந்தத்தையே குறிக்கிறது. அது என்றைக்குமே இயங்காதிருப்பதில்லை. சமூகக் கீழ் நிலையிலிருந்து மேல் நிலைக்கு முன்னேற கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்திற்கு முன்னேறிச் செல்கிறது என்று “ஏங்கெல்ஸ்” குடும்பத்தைப் பற்றி, “நவீன கால குடும்பம் அடிமை முறையை மட்டுமின்றிப் பண்ணையடிமை முறையையும் கரு அளவில் கொண்டிருந்தது”3 என வர்க்க கண்ணோட்டத்தோடு குடும்பத்தை ஏங்கெல்ஸ் வரையறுக்கிறார்.

“குடும்பம் என்ற அமைப்பு வேறு பணிகளைக் கொண்டுள்ள போதும் உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்வதே அதன் தேவையாக உள்ளது”4 என செ.கணேசலிங்கம் மிகச்சுருக்கமாக உழைக்கும் தன்மையை மறு உற்பத்தி அதாவது அடுத்த தலை முறைக்கும் உழைக்கும் திறனை அதிகப்படுத்திக் கொள்வதே என்று கூறுகிறார். மறுசுழற்சி என்பதை குடும்பம் காலம் காலமாகச் செய்து வருகிறது என்று கூறுகிறார்.

குடும்பம் பற்றி பல்வேறு கருத்துகளைப் பல்வேறு அறிஞர்கள் கூறியுள்ளனர். அறிஞர்களிடையே குடும்ப தோற்றம் பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. குடும்பம் என்ற அமைப்பு இயல்பாகவே சமூகத்தில் அமைந்து இருப்பது என்பதும் அது சமூக வளர்ச்சியால் ஏற்பட்ட ஒரு கால கட்டத்தில் தோன்றியது என்பதுமாகும். அதனால்,”குடும்பம் என்பது சமுதாய கட்டமைப்பின் மற்றொரு வடிவம். அதில் இயற்கையானதும் சமுதாயத் தன்மை


பன்னாட்டு கருத்தரங்கம் தமிழ் இலக்கியங்களில் சொல்வளமும் பொருள்வளமும்
தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

https://www.tamilvu.org/courses/degree/p103/p1032/html/p1032313.htm



கொண்டதுமான செயல்பாடுகள் மிக நுணுக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்கின்றன எனினும் சமுதாயச் செயல்பாடுகளே நிலைபெறுகின்றன. உயிரினச் செயல்பாடுகள் ஆண், பெண் இருபாலருக்குமிடையேயான உறவுகள், மக்களைப் பெறுதல் ஆகியவை மூலம் வெளிப்படுகின்றன''5 என வி.அப்ஸியானேவ் கூறுகிறார்.

''குடும்பம் எனும் அமைப்பில் உறுப்பினர்களாகத் திகழும் இவர்களின் பல நிலைகளில் பல்வேறு தகுதிகளைப் பெறுகிறார்கள். தந்தை, தாய், மகன், மகள், அத்தை, மாமன், அண்ணன், தங்கை என்னும் உறவு வலைக்குள் உழன்று கொண்டு இருக்கிறார்கள். இரத்த உறவினாலோ அல்லது மன உறவினாலோ அல்லது சுவிகாரத்தினாலோ பிணைப்புண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் சேர்ந்து வாழும் அமைப்புக் குடும்பம் என்று வரையறை செய்யப்படுகிறது" 6 என்கிறார் சேதுபதிமணியன். பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் குழுவோடு பிணைப்பு வைத்திருக்கிறான். அவனுடைய உடல் உள்ளத் தேவைகளை நிறைவேற்றி அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பம் ஆகும்.

"பாலுணர்வும், அதனால் ஏற்படுகின்ற ஆண், பெண் உறவும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவை. மனிதன் மட்டுமே அதை நெறிப்படுத்தி வாழக் கற்றுக்கொண்டான். மனிதன் தன்னுடைய பாலுணர்வுத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவும், தன்னுடைய வழித்தோன்றல் உடைமை போன்றவற்றை வளர்த்துக் கொள்வதற்கும் பிறர்க்கு எடுத்துக் காட்டாக இருந்து அறநெறிகளைச் சுற்றத்தாருடன் பகிர்ந்து கொள்வதற்கும் ஏற்படுத்திக் கொண்ட நிறுவனமே குடும்பம் எனப்படும்"7 என்று எ.பாலுச்சாமி குறிப்பிடுகிறார்.

சிறப்பாகவும், இத்தகைய வரையறைகளை உடைய குடும்பம் பல்வேறு பணிகளையும் நிறைவேற்றுகிறது.

"குடும்பம் தனித்த மனிதருக்காகவும், சமுதாயத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது. இது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி அளிக்கும் இடமாகவும் பணியாற்றுகிறது''8 என்பர் சி.பக்தவச்சலப் பாரதி "குடும்பமானது அன்பு செலுத்துமிடமாகவும் பொருளாதார பணியிடமாகவும், பொழுது போக்கிடமாகவும், பாதுகாப்பிடமாகவும் கல்வி அளிக்கும் இடமாகவும் பணியாற்றுகிறது''9 என்பர் சி.பக்தவச்சலப் பாரதி.

சுருக்கமாகக் கூறினால் உயிரியல் தேவைகளை நிறைவு செய்தல், சமுதாயம் மற்றும் பண்பாடுகளைக் கற்றுக் கொடுத்துப் பொருள் ஈட்டல், பராமரித்தல் பணி ஆகியவற்றைக் குடும்பம் திறம்படச் செய்கிறது.

"குடும்பம் (Family) ஒரு சிறிய குழு, குறைந்த அளவு, இது ஓர் ஆணையும் பெண்ணையும் உறுப்பினராகக் கொண்டதாகும். ஓர் ஆணும் , பெண்ணும் கணவன் மனைவி என்ற ஓர் உறவு நிலையை ஏற்படுத்திக் கொள்ளும் போது அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள்''10.

மனிதனின் உடல், உள்ளத் தேவைகளைப் பெரிதும் நிறைவேற்றி அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பமே. மணவாழ்வைத் தொடர்ந்து குடும்பத்தின் அளவு மட்டுமின்றி வகையும் கூடுகிறது. இந்த நிலையில் குடும்பம் முழுமையடைகிறது.

குடும்பம் என்பது திருக்குறளில் "குடிமை" "குடிசெயல்வகை" என்ற அதிகாரப் பெயர்களும் குடி, குடும்பம் என்ற சொல்லாட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

தொகுப்புரை

குடும்பம் என்ற சொல் பேமிலி (Family) ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதையும், உரோமியர்கள் "ஒருவருக்குச் சொந்தமான அடிமைகளின் மொத்தத் தொகை என்று குறிப்பிட்டதையும் இதன் வழி அறியலாம். குடும்பம் பற்றிய அறிஞர்களின் கருத்துகளையும் குடும்பங்களின் மூன்று வகைகளையும் அறியலாம். மனிதர்களுக்குள் ஏற்படும் விருப்பும் வெறுப்பும் அளவுக்கு மீறி போவதே குடும்பங்களின் நிலையில் மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றன. சொத்துகளினால் குடும்பங்கள் பிரிவதைக் காணமுடிகிறது.

அடிக்குறிப்பு

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 7, ப.592
2. பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியல் அடிப்படை கோட்பாடுகள், ப.96
3. ஏங்கெல்ஸ், தேர்வு நூல்கள் 11, பக்.95-96
4. செ.கணேசலிங்கம், இருகடிதங்கள், ப.53
5. வி.அப்ஸியானேவ் மார்க்சியத் தத்துவம், ப.58
6. சேதுபதிமணியன், சமூகவியல் சமூக வாழ்க்கை, ப.60
7. எ.பாலுச்சாமி, மருதத்தில் மக்கள் வாழ்வியல், ப.31
8. சி.பக்தவச்சலப்பாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.340
9. மேலது, ப.343
10. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி.7, ப.591
11. திருக்குறள், திருவள்ளுவர், குறள்.381
12. மேலது.957
13. மேலது.1029
14. தமிழ்மகன், காதல் தேனீ, ப.218
15. மேலது, ப.137

துணை நூற்பட்டியல்

1. வி. அப்ஸியானேவ்
-மார்க்ஸியத்தத்துவம்
நிசு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1985.
2. கணேசலிங்கம்.செ,
-இரு சிந்தனை கடிதங்கள்,
குமரன் பதிப்பகம்,
சென்னை, முதற்பதிப்பு-1985.
3. திருக்குறள்
-அருள்நெறிப் பதிப்பகம்,
குன்றக்குடி-630206,
சிவகங்கை மாவட்டம்.
4. பக்தவச்சலப்பாரதி,
-பண்பாட்டு மானிடவியல்,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, முதல்பதிப்பு, 1990.
5. பாஸ்கல்கிஸ்பர்ட்,
-சமூகவியலின் அடிப்படைப் கோட்பாடுகள்,
தமிழ் வெளியீட்டுக் கழகம்,
சென்னை, முதல்பதிப்பு, 1964.
6. பாலுச்சாமி,
-மருதத்தில் மக்கள் வாழ்வியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, முதல்பதிப்பு, 2011.
7. மார்ஸ் ஏங்கல்ஸ்,
-தேர்வு நூல்கள் தொகுதி-1,
குடும்பம் தனிச்சொத்து அரசு
ஆகியவற்றின் தோற்றம்,
முன்னேற்றப் பதிப்பகம்,மாஸ்கோ,1984.

❑❑❑

"படைக்குடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு"11 எனும் குறள் வாயிலாகக் "குடி" என்பதையும்,

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போர் உயர்ந்து"12 என்ற குறள் வழியாகவும் , குடும்பத்தைப் பற்றி வள்ளுவர்,

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக் குற்றம் மறைப்போம் உடம்பு"13 என்று குடும்பம் பற்றி வள்ளுவர் தம் கருத்தினை

முற்காலத்திலேயே எழுதியுள்ளார். மேலும் குடும்பங்களை இருவகைகளாகப் பிரிக்கலாம்

- தனிக்குடும்பம்
- கூட்டுக்குடும்பம்

மேற்கூறிய விளக்கங்களின் மூலம் சமுதாயம் மற்றும் குடும்பம் தோன்றிய நிலைகளைப் பின்வருமாறு அறிய முடிகிறது. சமுதாயத்தில் அங்கமாயிருக்கக் கூடிய குடும்பங்களின் ஒரு பிரிவாகிய கூட்டுக் குடும்பங்களில் ஏற்படும் சிக்கல்களைத் தமிழ்மகன் புதினங்களில் வழியாக ஆராயலாம்.

### கூட்டுக் குடும்பச் சிக்கல்

"காதல் தேனீ" என்ற புதினத்தில், அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, தம்பி எனக் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர். இந்த கூட்டுக் குடும்பத்தில் சுந்தரம் என்ற ஒருவனுக்கும் கஸ்தூரி என்ற பெண்ணை மணம் செய்து வைத்தனர். இங்கு ஆளுக்கொரு வேலை இருந்து கொண்டே இருந்தன. திருமணமாகி ஐந்தாறு மாதமாகியும் கூட அவள் எந்த வேலையும் செய்வதில்லை. ஊரில் கிடைக்கின்ற அனைத்து வார பத்திரிகைகளையும் படித்துக் கொண்டிருப்பது இவளுடைய வேலை. சுந்தரத்திற்கு சாப்பாடு போடுவதே பெரிய பணியாக இருந்தது. இவனுடைய அம்மா ஒரு நாள் திருமணத்திற்கு சென்றுவிட்டாள். அன்றைய தினத்தில், "துவைக்கப் போடப் பட்டிருந்த துணிகளும் கழுவப் போட்டிருந்த பாத்திரங்களும் அப்படியே இருந்தன. நிச்சயமாய் ஒரு ஆளால் முடியாத வேலைகள். அண்ணி கஸ்தூரியே உணர்ந்து வருவாள் என்று எதிர்பார்த்து கடைசியில், "உங்க வீட்லயும் இப்படித்தான் உக்காந்துகுனு இருப்பியா?" என்று கேட்டிருக்கிறாள்."14 என்று தமிழ்மகன் குறிப்பிடுகிறார்.

இதனால் கஸ்தூரி அன்றே ஊருக்குச் சென்று விட்டாள். இதன் மூலம் ஒற்றுமை, புரிதலின்மை, விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை ஆகியன இல்லாமல் இருப்பது தெளிவாகிறது.

### சொத்துச்சிக்கல்

சொத்துகளினால் பலவிதமான பிரச்சனைகள் வருவதைக் காணலாம். "மானுடப் பண்ணை" என்ற புதினத்தில் நடராஜ் என்ற ஒருவன் இருக்கிறான். அவனுடைய தாத்தா, பாட்டி விவசாயமும், மாடுகன்றுகளை வளர்த்து வந்தனர். இவனுடைய பாட்டி இறந்து விட்டாள். அதன் பிறகு தோட்டம் மற்றும் எல்லாவற்றையும் விற்று விட்டார். தாத்தா சிறிது காலம் பெரியம்மா வீட்டில் வசித்து வந்தார்.

"மாமி ஒரு முறை , "பணத்துக்காக நாய் மாதிரி ஓடியாறாளுங்க" என்று சொல்லி விட்டதால் இவர்கள் அங்கு போவதை நிறுத்திக் கொள்ள, ஒரு வருஷத்திற்குள் மாமா புதிதாக ஆடம்பர வீடு கட்டத் துவங்கியிருந்தார்"15. அன்றிலிருந்து பெண்கள் இருவரும் தந்தையைப் பார்க்க வீட்டுக்குப் போவதில்லை.நேரடியாகப் பணம் குறித்துப் பேசுவதற்குச் சென்றனர். சொத்துகளினால் குடும்ப உறவுகள் சிதறுவதைக் காண முடிகிறது.